முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்
முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
S.C.No. 106-15

PW 11

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணி | மதம் | |
| த/பெ | | தொழில் | |
| கிராமம் | | வயது | |
| தாலுக்கா | | தேதி | |
| வட்டம் | | | |

( 15/06/2022 ) இன்று 1873ம் ஆண்டு சட்டம் 10ன் படி அ.சா .....11...... சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

முதல் விசாரணை

நான் தற்சமயம் கடலூர் பொருளாதார குற்றப்பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். கடந்த 2008ம் ஆண்டு நான் விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியிருந்தபோது 23/12/2008 அன்று இரவு 11.00 மணிக்கு விழுப்புரம் நகர தலைமை காவலர் 1097 ராமலிங்கம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று விழுப்புரம் மேற்கு காவல நிலைய குற்ற எண்.667/2008 பிரிவு 332, 294பி, 323, 307 இதச வாக வழககு பதிவு செய்தேன். தலைமை காவலர் 1097 என்பவரை ராமலிங்கம் என்பவரை மெடிக்கல் மெமோ 22/8 பிரகாரம் விழுப்புரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பிவைத்தேன். இரவு 11.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வினாயகம், சுந்தரமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். விழ்ப்புரம் அரசு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த தலைமை காவலர் ராமலிங்கம் மற்றும் சக்திவேல் என்பவர்களை விசாரித்து வாககுமூலம் பதிவு செய்தேன். 24/11/2008 அன்று காலை 06.00 மணிக்கு விழுப்புரம் சென்னை நெடுஞ்சாலை மாரியம்மன் கோவில் பேருந்து நிறுத்தத்தில் வைத்து வழக்கின் 1வது எதிரி ஜெயபிரகாஸ் நாராயணன் என்பவரை சாட்சிகள் விஜயகுமார் , செல்வம் ஆகியோர்கள் முன்னிலையில் காரணம் கூறி கைது செய்தேன். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் விஜயகுமார் மற்றும் செல்வம் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். காலை 07.00 மணிக்கு எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்தேன். காலை 09.00 அளவில் எதிரியை பார்ப்பதற்காக முத்துவேல், கார்த்திக், கனகராஜ் ஆகியோர்கள் வந்தார்கள். எதிரிகளை பார்த்து பேசுவதற்கு அனுமதித்தேன். மற்றும் இவ்வழக்கில் சாட்சிகள் நந்தகோபால் , ஏழுமலை, அண்ணாமலை, வினாயகம், சுந்தரமூர்த்தி, விஜயகுமார் மற்றும் செல்வம்

ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை மருத்துவ பரிசோதனைக்கு காவலர் சகிதம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். பிறகு தகுந்த ஆவணங்களுடன் தலைமை காவலர் அய்யனாரப்பன், முதுநிலை காவலர் வீராசாமி ஆகியோர் சகிதம் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். 22/11/2008 அன்று காலை 10.15 மணிக்கு 1வது எதிரி பெயரிட்டு தபால் வந்ததை முன்னிட்டு சிஎஸ்ஆர் எண்.222/2008 ஆக பதிவு செய்தேன். 18/12/2008 அன்று தலைமை காவலர் ராமலிங்கத்தின் காயச்சான்று கிடைக்கப்பெற்று அரசு மருத்துவ அதிகாரி பாஸ்காரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 28/02/2009 அன்று நான் பணி மாறுதலில் சென்றதால் வழக்கு கோப்பை நிலையம் எழுத்தரிடம் ஒப்புவித்து சென்றேன். மேற்படி முதல் தகவல் அறிக்கை அதசாஆ-7, பார்வை மகசர் அதசாஆ.8, மாதிரி வரைபடம் அதசாஆ.9, எதிரி ஜெயபிரகாஸ்நாராயணன் கொடுத்த ஒப்புதல் வாககுமூலத்தில் கண்ட அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அதசாஆ-10.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லாததாலும் சாட்சியின் உடல்நிலை கருதியும் சாட்சியின் நலன் கருதியும் சம நீதியின் பாற்பட்டும் குறுக்கு விசாரணை இல்லையென முடிக்கப்படுகிறது.</u>

x

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல ஆஜர் எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சர் திரு.P. ரமேஷ்பாபு என்பவருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டது. |

ஒப்பம்/எஸ்.விஜயகுமார்,
முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
விழுப்புரம்.